# நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் - வரலாற்று வரைவியல் வளர்ச்சியில் பெறும் வகிபங்கு பற்றிய ஒரு விமர்சனக் கண்ணோட்டம்

எச்.எப்.பிர்தௌஸியா

*கலை கலாசார பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*

irdawsiyafac@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

வரலாற்றுவரைவியலில் புதிய முறைமைகளை அறிமுகப்படுத்தி உருவான வரலாற்றுவரைவியல் பள்ளி முறையொன்றாக, நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் திகழ்கின்றது. ஏனைய அறிவியல் துறைகளைப் போலவே வரலாற்றினை கட்டியெழுப்பும் பல்வேறு வழிமுறைகளது தொகுப்பாக உள்ள வரலாற்று வரைவியலிலும் பெரும் திருப்பு முனையாக அமையப் பெற்ற விஞ்ஞான திருப்பம் எனும் Scientific Turn மூலம் வரலாற்றை பகுத்தறிவின் கண்ணோட்டத்தில் யதார்த்தத்திற்கு முக்கியத்துவம் வழங்கி வரலாற்றை வளர்த்துவிட்ட ஒரு வரலாற்று வரைவியல் முறையாக நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் காணப்படுகின்றது. பிற்காலத்தில் இந்த நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் சில வரலாற்றாசியரியர்களால் விமர்சிக்கப்பட்டவேளை அது தன்னை வளர்த்துக்கொண்டதுடன் மட்டுமன்றி வரலாற்று வரைவியலில் Linguistic Turn எனும் மொழியியல் சார்ந்த திருப்பம் ஏற்படக் காரணியுமானது. நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய பங்காளராக வரலாற்றாசிரியர் ஈ.எச்.கார் விளங்குகின்றார். ஆயினும் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலின் பின்னர் வரலாற்று வரைவியலில் உருவான பல பள்ளிகளது முன்னேற்றம் காரணமாக அவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்துத் தந்த ஒரு பள்ளியான நேர்கட்சிவாத வரலாற்றுவரைவியல் தொடர்பாக கவனம் செலுத்தப்படுவது குறைவாகவே உள்ளது. ஆகவே, நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் என்றால் என்ன, அதனை வளர்த்துவிட்ட அறிஞர்கள், ஈ.எச்.கார் பார்வையில் வரலாற்று வரைவியலின் பண்புகள் மற்றும் பிற்காலத்தில் இப்பள்ளி மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் என்பவற்றோடு அந்த விமர்சனங்கள் வரலாற்று வரைவியலின் வளர்ச்சியில் எத்தகைய வளர்ச்சியை ஏற்படுத்தின என்பது தொடர்பாகவும் இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது. இவ்விபரணபகுப்பாய்விற்கு இரண்டாந்தர மூலாதாரங்களாக நூல்கள், ஆய்வுரைகள், இணையம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** *நேர்கட்சிவாத வரலாற்றுவரைவியல், வரலாற்றுவரைவியல், விஞ்ஞான முறைமை, மூலாதாரங்கள்*

## அறிமுகம்

வரலாற்றினை வரைகின்ற கலையாக அல்லது வரலாற்றின் வரலாறாக வரலாற்று வரைவியல் (Historiography) காணப்படுகின்றது. இதனை வரலாற்றின் தாயகமான கிரேக்கரே துவக்கி வைத்தனர். அதன்படி வரலாறானது ஒரு கல்வித்துறையாக எங்கே, எப்போது தோன்றியது, அதன்போது அது எத்தகைய நிலையை அடைந்திருந்தது, அது எவ்வாறு படிப்படியாக வளர்ச்சிப் பாதை நோக்கி பயணித்தது, அதன் வளர்ச்சியில் பங்குதாரர்களாக இருந்தோர் யாவர், தற்சமயம் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் அதன் நிலை யாது என்பவற்றைக் கற்பதாக வரலாற்று வரைவியல் பற்றிய கற்கை நிலவுகின்றது.

வரலாற்று வரைவியலானது மனித சமூகத்தில் வரலாறு தொடர்பான சிந்தனையும் அதனைப் பாதுகாப்பதன் மீதான வரலாற்று உணர்வும் தோன்றிய காலம் முதலாகவே வளர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆயினும் கோட்பாடுகளாக அவை ஒரு கட்டமைப்பிற்குள்

கொண்டுவரப்பட்டது வரலாற்றுணர்வு மனித சமூகத்தில் தோன்றியதிலிருந்து மிகவும் பிற்பட்ட காலப்பகுதியிலாகும். இவ்வாறு வரலாற்றைக் கட்டியெழுப்புதலுடன் தொடர்புடைய இக்கற்கையானது காலத்திற்குக் காலம் மாற்றங்களை சந்தித்து வளர்ச்சியுற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஒவ்வொரு காலகட்டத்திலும் அவ்வக்கால அரசியல், சமூக, பொருளாதார, சிந்தனை மாற்றங்களுக்கு ஏற்ப வரலாற்று வரைவியல் தொடர்பான வரலாற்றாசிரியர்களது பார்வையும் எதிர்பார்ப்பும் மாற்றமுற்று வந்துள்ளதுடன் அவை வரலாற்று வரைவியலில் புதிய திருப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறு ஏற்பட்ட மாற்றங்களுக்கு, குறிப்பாக மனித சிந்தனையில் ஏற்பட்ட முதிர்ச்சியுடன் அறிவுத் தேடலில் ஏற்பட்ட விரிவு, தர்க்க ரீதியிலான சிந்தனையின்பால் கவரப்பட்டமை, பகுத்தறிவிற்கு முக்கியத்துவம் வழங்கி விடயங்களை ஆய்வு செய்தமை, எந்தவொரு விடயத்தையும் புதிய கோணங்களில் சிந்திக்கும் பாங்கு அதிகரித்தமை போன்ற பல காரணிகள் வித்திட்டன.

எனவே வரலாற்றை ஒரு தனிப்பட்ட அறிவுக் களஞ்சியமாக நிறுவி அதன் வளர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகளான கிரேக்கர் முதல் இன்று வரையில் வரலாற்று வரைவியலானது மேற்கூறிய காரணிகளினால் அவ்வக்கால அறிஞர்களது தேடல் மற்றும் அறிவியல் சிந்தனைகளது வளர்ச்சி என்பவற்றிற்கு ஏற்ப பல மாற்றங்களை எதிர்கொண்டு வளர்ந்து வந்துள்ளது. அவ்வாறான வளர்ச்சிப் போக்கில் பெரும் திருப்பமாக அமைந்த காலப்பகுதியாக 19ஆம் நூற்றாண்டின் வரலாற்று வரைவியல்களது செல்நெறி விளங்குகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலானது பல புதிய வரலாற்று வரைவியல் சார்ந்த சிந்தனைகளுக்கு அடிப்படையாக இருந்த ஒரு பள்ளியாக இருந்துள்ளது. ஆயினும் அதன் பின்னரான புதிய வரலாற்று வரைவியல் பள்ளிகளது ஏற்பினால் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலது முக்கியத்துவம் அல்லது வரலாற்று வரைவியலில் அதன் வகிபங்கு தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுவது குறைவாகவே உள்ளது. ஆகவே, நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் உருவாகப் பின்னணியாக அமைந்த முன்னைய வரலாற்று வரைவியல்கள் பற்றி மேலோட்டமாக நோக்கி நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் அவற்றிலிருந்து வேறுபட்டு நிற்குமாற்றை விளக்குவது இவ்வாய்வின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாகும். அவ்வாறே நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் என்றால் என்ன, அதனை வளர்த்துவிட்ட அறிஞர்கள் மற்றும் ஈ.எச்.கார் பார்வையில் வரலாற்று வரைவியலின் பண்புகள் மற்றும் பிற்காலத்தில் இப்பள்ளி மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் என்பவற்றோடு அந்த விமர்சனங்கள் வரலாற்று வரைவியலின் வளர்ச்சியில் எத்தகைய வளர்ச்சியை ஏற்படுத்தின என்பது தொடர்பாக இவ்வாய்வில் பிரதானமாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

வரலாற்று வரைவியல் சார்ந்த இவ்வாய்வானது விவரண ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு அமையப்பெற்றுள்ளதுடன் நூல்கள், இணையம் உள்ளிட்ட இரண்டாந்தர மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட பண்புசார் ஆய்வாகவும் உள்ளது.

**19ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கால வரலாற்று வரைவியல்களது வளர்ச்சி**

19ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் நிலவிய வரலாற்று வரைவியல் முறைகள் பல பரிணாமங்களைக் கொண்டு காணப்படுகின்றது. வரலாற்று வரைவியல் பற்றி பேசும் போது வரலாறு என்றால் என்ன என்பது பற்றி இந்த வரலாற்று வரைவியல்கள் கூறுவதை அறிவது அவசியமாகும். நவீனகால வரலாறு பற்றிய உரையாடல்களில் முக்கியத் திருப்பு முனையாக 19ஆம் நூற்றாண்டிற்கு முன்னரான, வரலாறு என்றால் என்ன என்பது பற்றிய உரையாடல்களும் விமர்சனங்களும் அமையப் பெற்றிருந்தன. மேற்கு


ஐரோப்பாவினை மையமாகக் கொண்டு வளர்ச்சியுற்ற மானிட வரலாற்று வரைவியலுடன் இந்த உரையாடல் (Discourse) வளர்ச்சியுற்றது. இதனூடாக வரலாற்று வரைவியல் பற்றி சிந்தனையில் புதிய உரையாடல்கள் விருத்தியுற்றன.

குறிப்பாக 15ஆம், 16ஆம் நூற்றாண்டு முதலாக நிலவிவந்த சிந்தனா ரீதியிலான கருத்தாடல்களில் இருந்து வேறுபட்டு அறிவைப் பெற முடியுமான முறையாக விஞ்ஞான கருத்துக்கள் படிப்படியாக வலுவுற்றன. அத்தோடு உலகம் மனிதனால் புரிந்துகொள்ள முடியுமான ஒன்றாகும். அதற்கு விஞ்ஞான முறையியல்கள் உறுதுணையாக இருக்கும் போன்ற கருத்துக்கள் வளர்ச்சியுற்றன. ஆயினும் சமகாலத்தில் அறிவு பற்றி கருத்தாடல்களில் வரலாறு தொடர்பாக, வரலாறு விஞ்ஞானம் அல்ல எனவும் அது விஞ்ஞான ஆய்வு முறைகளினுள் உள்ளடங்குவதில்லை எனவும் கூறப்பட்டது. குறித்த காலத்தைச் சேர்ந்தவரான டேகார்ட், அறிவை ஐயப்படுவதன் மூலமே பெறமுடியும் ஆகையால், அனைத்தையும் ஐயக்கண் கொண்டே பார்க்க வேண்டும் எனும் கருத்தைக் கொண்டிருந்தார். தன்னால் எந்தவொரு கேள்விக்கும் உட்படுத்தாது ஏற்க முடியுமான விடயங்கள் தவிர்த்து ஏனைய அனைத்தையும் ஐயம்கொள்ள வேண்டும் என்றார். அதனூடாகவே விஞ்ஞான ரீதியிலான அறிவைப் பெற முடியும் எனவும் கூறப்பட்டது.

டேர்கார்ட் இந்த வரையறைக்குள் உள்ளாகாத அறிவை அறிவாக ஏற்கவில்லை. வரலாற்றை எடுத்துக் கொண்டால் அதில் எந்தவொன்றையும் ஐயமின்றி அறிந்துகொள்ள முடியாது. வரலாறானது பொய்கள், கற்பனைகளை உடையது. அதனால் அதனை மனித ஞானத்தினுள் உள்ளடக்க முடியுமான பொருத்தமுடைய கற்கைத் துறை அல்ல எனவும் டேகார்ட் கருதினார். வரலாற்றை தெய்வக் கதைகள், காவியங்களுடன் தொடர்புடைய கல்வியாகவே பார்க்கப்பட்டது.

ஆயினும் டேகார்ட்டிற்கு பிற்பட்ட காலத்தில் படிப்படியாக விஞ்ஞான ரீதியிலான முறைமைகளைக் கையாண்டு வரலாறு மூலம் கடந்த கால வரலாற்றை அறிய முடியும் எனும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு அதுசார்ந்த கருத்துக்கள் வளர்க்கப்பட்டன. அறிவை ஆய்வு முறைகளினூடாக அடையப் பெறுவதை விஞ்ஞான முறையியலாக உறுதிப்படலானது.

மனிதன் விஞ்ஞான முறைமையினூடாக மட்டுமே உலகையறிய முடியும் எனவும் ஒன்றைப் புரிந்து கொள்வதென்பதே 'அறிவு' எனவும் அறிவைப் பெறும் ஒரே முறை விஞ்ஞான ரீதியிலான சிந்தனை என்பதும் வலுப்பெற்றது. ஆகவே அறிவைப் பெறவும் அறிவைக் கட்டியெழுப்பவும் பிரமிட் வடிவ கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டு இக்கருத்து தெளிவுறுத்தப்பட்டது. அறிவைப் பெறுவதன் ஆரம்பமானது தன்னால் இயலுமான அளவில் பிரபஞ்சம் பற்றியத் தகவல்களைத் தேடுவதனூடாக ஆரம்பிக்கின்றது என கருதப்பட்டது.




(Pyramid of knowledge)

முடியுமான வரையில் சேகரிக்கப்பட்ட சான்றுகளூடாகத் தகவல்களையும் தகவல்களினூடாக அறிவையும் அறிவினூடாக ஞானத்தையும் பெறும் கட்டமைப்பே இந்த பிரமிட் மூலம் தெளிவுறுத்தப்படுகின்றது. எனவே ஆய்வாளர் ஒருவரது முக்கியப் பொறுப்பாக, முடியுமான வரையில் சான்றாதாரங்களைத் தேடி அவற்றிற்கு வரலாற்றுப் பெறுமானம் ஒன்றை வழங்குவது அறியப்பட்டது. இதனூடாக விஞ்ஞான ஆய்வு முறைகளை உடைய கற்கைகளாக ஒவ்வொன்றும் வரிசைப்படுத்தப்படும் போது, 19ஆம் நூற்றாண்டாகும் போது வரலாறும் விஞ்ஞான ஆய்வகளின் அடிப்படையிலான கற்கைநெறியாக உருவானதை கண்டுகொள்ள முடிகின்றது.

**19ஆம் நூற்றாண்டின் பின்னரான வரலாற்று வரைவியல்**

19ஆம் நூற்றாண்டாகும் போது விஞ்ஞானமானது அறிவின் அதிபதியாகக் கணிக்கப்பட்டது. விஞ்ஞானம் சார்ந்த கற்கைகளும் சமூக, மானிட கற்கைத் துறைகளும் விஞ்ஞான ரீதியிலான கட்டமைப்பைப் பெற்றுக்கொண்டது. அதனூடாக இயற்கை விஞ்ஞானங்கள், சமூக விஞ்ஞானங்கள் என்பவற்றில் அறிவைக் கட்டியெழுப்பும் பிரதான வழிமுறையாக விஞ்ஞான முறைமை அல்லது புலனறிவாதம் அல்லது அனுபவவாதம் உருவானது.

Scientific Turn விஞ்ஞானம் சார்ந்த திருப்பம் உருவான இக்காலத்தை நோக்கும் போது சமூகத்தை ஆய்வு செய்யும் கற்கையாக வரலாற்றை அதன் அமைப்பு, இயல்பு, விதிமுறைகள் பற்றி பார்க்கலாயினர். அதன் பின்னர் வரலாற்றுத் துறையானது புதிய கருத்துக்களை உருவாக்கிக் கொண்டு சமகாலத்தில் ஆதிக்கம் கொண்டிருந்த விஞ்ஞான அறிவுசார்ந்த முறைமைகளுடன் இணைந்து பயணிக்கத் தொடங்கியது.

20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியின் ஆரம்பம் முதலாக விஞ்ஞான வரலாற்று வரைவியலில் புதிய வழிமுறைகளும் பள்ளிகளும் (Traditions/Schools) இணைந்திருக்கக் காணலாம். அத்தகைய மேற்குலக வரலாற்று வரைவியலில் புதிய வழிமுறைகளாக நேர்கட்சிவாத (புலனறிவாத) வரலாற்று வரைவியல் மற்றும் அதனுடன் இணைந்து வளர்ந்த அனெல்ஸ் வரலாற்றுப் பள்ளி (Annels School Historiography) மார்க்ஸிய வரலாற்று வரைவியல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்த அறிவுடன் இணைந்தவாறு வளர்ந்த புதிய உரையாடல்கள் முழு சமூக விஞ்ஞான கற்கைத் துறைகளிலும் பெரும் திருப்பங்கள் ஏற்படக் காரணியாயின. குறிப்பாக மொழியுடன் தொடர்புடையதாகத் தோன்றி பின்பு தத்துவவியலுடன் இணைந்து வளர்ந்து, அதன் பின்பு மானிட விஞ்ஞானங்களுடன் செயற்படும் புதிய கல்வி முறையாக வரலாறு 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் தோன்றி வளர்ந்தது. இதனுடன் தொடர்புடைய கற்கையை விருத்தி செய்ய (Linguistic Turn) மொழிசார் திருப்பம் எனும் பதத்தை அறிஞர் பிரயோகிக்கின்றனர். இது தனியான கற்கைக்குரியதாக அன்றி தனித்தனி கற்கைத் துறைகளுடன் இணைந்ததாகக் காணப்படுகின்றது. மிெ‘ல் புகோ, ஜெக் டெரீடா, ஜுலியா கிறிஸ்டீவா பொன்ற பல துறைசார்ந்த தத்துவவியலாளர்களதும் சிந்தனையாளர்களதும் பங்குபற்றலுடன் ஓர் அறிவசார் திருப்பமாக இந்த மொழிசார் திருப்பம் வரலாற்று வரைவியலிலும் செல்வாக்கு செலுத்தியுள்ளது.

**Historiography**

I. $1^{St}$ Discourse - Pre $19^{th}$ century notion

II. $2^{nd}$ Discourse - Scientific Turn

III. $3^{rd}$ Discourse - Linguistic Turn

**நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல்**

18ஆம் நூற்றாண்டின் பின்னறைப் பகுதி மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் வரலாற்று வரைவியலானது ஒரு விஞ்ஞானம் எனப்பட்டதுடன் அது ஒரு கற்கைத் துறையாகக் கொள்ளத்தக்கது எனும் வாதம் வலுப்பெற்றுக் கொண்டிருந்தது. மத்தியக் கால ஐரோப்பாவின் கற்பனைக் காவிய கருத்தியலின் பின் மேற்கத்தேய அறிவுப் பாரம்பரியத்தில் மிக்க பிரபலமுற்றதாக நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் விளங்கியது.

நூற்றுக் கணக்கில் எழுச்சியுற்ற விவசாயக் கலவரங்கள், தொழிற்சாலைக் கலவரங்கள் உட்பட போராட்டங்கள், சுதந்திர மனப்பான்மை, நாடுகாண் பயணங்கள், பிரபஞ்சத்தின் இரகசியங்களை அறிதல் போன்ற பலவற்றின் செல்வாக்கினால் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலுக்கான அடிப்படை சிந்தனை மாற்றம் உருவானது. நேர்கட்சிவாதம் பற்றிய சிந்தனையைத் தூண்டிய மற்றையக் காரணிகளாக ஐசக் நிவ்டன், பிரன்ஸிஸ் பேகன் போன்றோரது கண்டுபிடிப்புக்களும் விளைவுகளும் அமையப் பெற்றிருந்தன.

நிவ்டனது கண்டுபிடிப்பிற்கு அடிகோழிய அப்பிள் பழம் கீழே விழுதல் தொடக்கம் ரொக்கட்டுக்கள் விண்ணுக்கு அனுப்பப்படுதல் வரையில் யாவும் கணித அறிவின் விளைவானதை கண்ட மக்கள் அதன்பால் அதிக ஆர்வம் காட்டினர். கடவுளது உயர் தன்மையை விசவாசம் கொண்டிருப்பதை விட கணித முறைகளினால் பிரபஞ்சம் பற்றியும் அதில் பொதிந்துள்ள ஞானம் பற்றியும் அறிய ஆவலுற்றனர். இதனால் அனைத்து கற்கைகளிலும் கணித முறைமைகள் உள்வாங்கப்பட்டது^> m%kdkA¥"2009&. அனைத்துப் பாடங்களிலும் உயர்வாகக் கணிதம் போற்றப்பட்டது. அதனால் அது விஞ்ஞானத்தின் ராணி (Queen of Science) எனப் போற்றப்பட்டது.

நேர்கட்சிவாதிகளிடம் கணிதம் பிரபலமாகப் பேசப்பட்டது. மூலாதாரங்களை முதன்மையாகக் கொண்டு வரலாறு பேசப்பட வேண்டும் எனப்பட்டது. இதற்காக ஆய்வுகள், விமர்சனங்கள், பரிசோதனைக் என்பன முறைமைகளாகக் கூறப்பட்டன^> m%kdkA¥"2009ரூ.இதனால்தான் நேர்கட்சிவாதம் தொடர்பாக கொலிங்வூட் "இயற்கை விஞ்ஞானத்திற்குத் துணை போன தத்துவம்" என்பதாகக் கூறியுள்ளார்(அருந்தவராஜா,2011). எனவே நேர்கட்சிவாதம் என்பது சமூகத்தின் பரிணாம வளர்ச்சிப் போக்குகளை விளக்குவதற்காக இயற்கை விஞ்ஞான முறைகளைக் கைக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக நேர்கட்சிவாதத்தைக் குறிப்பிடலாம். நேர்கட்சிவாத வரலாற்றாசிரியர்கள் மூலாதாரங்களை சேகரித்தல் எனும் விடயத்திற்கே அதிக முக்கியத்துவம் வழங்குவதுடன் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலின் அடிப்படைப் பண்பாகவும் அதனைக் கருதுகின்றனர். மூலாதாரங்கள் இன்றி வரலாறே இல்லை என்றனர். ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமே ஒன்றை ஏற்றனர். சான்றுகளது உயர்ந்த எண்ணிக்கை ஒரு விடயத்தின் மீதான உயர் நம்பகத்தன்மைக்கும் உறுதிப்பாட்டிற்கும் காரணியாகக் கருதினர். ஆதாரங்களது போலித் தன்மை பற்றி ஆய்வு செய்வதால் அந்த ஆதாரமானது வேறு எந்த செல்வாக்கிலிருந்தும் அப்பாற்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தியது.

சமய மற்றும் ஏனைய ஆதிக்கங்களில் இருந்து விடுவித்தமையானது நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலின் வெற்றியாகும். மூலாதாரங்களது உண்மைத் தன்மை மீது அதிக அக்கறைக் காட்டினர். இதனால் வரலாற்றை ஒரு விஞ்ஞானமாக மாற்றியமைத்துள்ளதாகவும் கூறலாயினர். நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலின்படி மூலாதாரங்கள் மற்றும் பொது விதிகள் உருவாக்குதல் தொடர்பாக பின்வரும் கருத்து நிலவியது. அதாவது, ஆதாரங்களை வரலாற்று வரைவியலின் பிரதான பகுதியாகக் கொள்ளும் போது, வரலாற்றின் வளர்ச்சிப் போக்கிற்குக் காரணமானது. உண்மைகள் ஒன்றோடொன்று தொடர்புற்று காணப்படுவதனால் அவற்றிடையில் தொடர்பொன்று நிலவும். அதனைக் கொண்டு பொதுவிதிகளை உருவாக்கிடலாம். அதுமட்டுமன்றி காரணகாரிய விளக்கங்களையும் அளிக்க முடியுமாகின்றது. இந்த காரண காரிய தொடர்பைக் கொண்டு நிகழ்வுகளை முன்கூட்டியே எதிர்வுகூற இயலுமாகின்றது. மூலாதாரங்களது எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க காரணகாரிய அடிப்படையில் வரலாற்றில் ஒரு தொடர்ச்சியைக் காணலாம்.

இவ்விடயத்தை நேர்கட்சிவாத வரலாற்றாளர்கள் மூன்று பரிணாமங்களாக முன்வைக்கின்றனர். (அருந்தவராஜா,2011)

1. ஆவணங்களைக்கொண்டு ஆதாரங்களை சேகரித்தல்.
2. ஆதாரங்களின் அடிப்படையில் நிகழ்ச்சிகளிடையே ஒற்றுமை தன்மையைக் கண்டறிதல்
3. வளர்ச்சியின் இன்றியமையாத தன்மையை உறுதி செய்தல்.

இங்கு நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலில் முதற்கட்டமாக ஆதாரங்களை சேகரிப்பதற்கு வழங்கியுள்ள முக்கியத்துவம் தெளிவாகின்றது.

நேர்கட்சிவாதிகள் ஆதாரங்கள் மற்றும் விஞ்ஞான முறை என்பவற்றின் அவசியத்தை வலுப்படுத்தும் வகையில் பின்வரும் வாதங்களை முன்வைக்கின்றனர்.

- மனித சிந்தனைத் திறனானது உலகைப் புரிய ஆரம்பிக்கும் போது எதுவும் எழுதப்படாத வெற்று வெள்ளைக் காகிதமாக உள்ளது. அது புலனுணர்வு அன்றிய ஏனையவை மூலமாகப் பெறப்படும் எதையும் கொண்டிருப்பதில்லை. உலகைப் பற்றிய ஞானத்தைப் பெற சரியான வழிமுறை புலனுணர்வாகும். ஆகவே மூலாதாரங்கள் என்பவை புலனுணர்வக்கு உட்பட்டு தகவல்களை தெரியப்படுத்தக் கூடியவையாதலால் வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் மூலாதாரங்கள் முதலிடம் பெறுகின்றன.
- ஞானத்தைப் பெற்றுக்கொள்வதில் (Data-Information-Knowledge-wisdom) உண்மை-பொய் என்பவற்றைப் பற்றி அறிந்துகொள்ளக் கூடிய ஒரே வழிமுறையாக பரிசீலனை செய்வதும் கண்காணித்தலுக்கு உட்படுத்தலுமே காணப்பட்டது. இதற்குட்படாதவை ஏற்கப்படவில்லை.
- விஞ்ஞானப் பரிசோதனைகளது நோக்கமாக விஞ்ஞான முறைமைகளைக் கண்டறிவது காணப்பெறுகின்றது. அதாவது மீண்டும் மீண்டும் நடைபெறும் அநுபவங்களது மாதிரியை பொதுமைப்படுத்துவதாகும். ஆகவே பொதுவிதிகளை உருவாக்குவதில் விஞ்ஞான ரீதியிலான பரிசோதனை முறைமைகள் சிறந்த பங்கை ஆற்றுகின்றன.
- ஒரு விடயத்தை விஞ்ஞான ரீதியாக விபரிக்கும் போது குறித்த விடயம் விஞ்ஞான விதிமுறைகளுக்கு உட்படும். அதனூடாக அவ்விடயம் எதிர் காலத்தில் எவ்வாறு இடம்பெறும் என யூகிக்க வழியேற்படுகின்றது.

இவ்வாறாக மூலாதாரங்களையும் அவை பகுப்பாய்வுக்குட்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் நேர்கட்சிவாதிகள் தாம் சார்ந்த பல வாதங்களை முன்வைத்தனர்.

நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலில் சிறப்புப் பண்புகளாக உண்மையை உறுதி செய்தல், வரலாற்றில் காணப்பட்ட சமய செல்வாக்கை இல்லாதொழித்தமை, பொது விதிகளை ஏற்படுத்துவதன் மீது கவனம் செலுத்தியமை, விடயங்களை காரண காரியம் அடிப்படையில் விளங்கியமை, வரலாற்று நிகழ்வுகள் இடையிலான தொடர்பினை இனம்கண்டமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அத்தோடு பெரிய வரலாற்றுப் பரப்புடைய வரலாறுகளை எழுதுவதை விட எல்லைப்பட்ட வகையில் பரப்பு, தலைப்பு, காலம் அடிப்படையில் சிறிய விடயப் பரப்பை ஆழமாக ஆய்வு செய்து வரலாற்றாக்குவதை அது வரவேற்கின்றது. மேலும் ஒரு வரலாற்றாசிரியன் தீர்ப்பாளனாக அன்றி ஒன்றை முன்வைப்பவனாக இருக்க வேண்டும். அதன்போது வரலாறானது ஓர் அறிக்கையின் மாதிரியில் இருக்குமேயன்றி சுவையான கவரும் வகையானதாக அமையப் பெறாது. மனித வம்சக் கதைகளது உருவாக்கத்தைத் தடுத்தன. இவை யாவற்றினதும் நோக்கம் நடுவுநிலையிலான அடிப்படையில் வரலாறு எழுதப்பட வேண்டும் என்பதாகும். ஆதாரங்களின் அடிப்படையில் வரலாற்றை எழுதுவதன் அவசியத்தை ஊக்கப்படுத்துவதன் நோக்கமும் இதுவாகும்.

நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலாளர்கள் வரலாற்றை விஞ்ஞானமென நிறுவ தமது வாதத்தை பின்வருமாறு நிறுவகின்றனர். அதாவது இயற்கை விஞ்ஞானங்களை ஆய்வு செய்யும் ஒருவர் இயற்கையில் உள்ளவற்றினை உற்று அவதானித்து அவற்றின் செயற்பாடுகளின் தொடர்புகளை அவதானித்ததன் பின்னர் அவை சார்ந்த பொதுவிதிகளைக் காண்பர். அவ்வாறுதான் ஒரு வரலாற்றாசிரியனும் கருமமாற்றுகின்றான். தான் தேடிப் பெற்ற மூலாதாரங்களை உற்றுநோக்கி அவற்றிலிருந்து பெறப்படும் கருத்துக்களைக் கொண்டு பொது விதி வகுக்க முயலுகின்றார். எனவே இயற்கை விஞ்ஞான முறையியலுடன் வரலாற்று வரைவியல் உடன்படுகின்றது.

எனினும் கற்பனைக் காவிய வரலாற்று வரைவியலின்படி, இயற்கையையும் மனிதனையும் வேறுவேறாகவே நோக்கினர். இயற்கையை ஆராய்ந்து முடிவுகளை ஏற்கும் வகையில் மனிதனை ஆராய முடியாது எனக் கூறினர். ஏனெனில் இயற்கையானது மாறாத் தன்மையுடைய நடைமுறை உடையது. ஆனால் மனிதனோ நாளும் பொழுதும் மாறும் தன்மையுடையவன் என்பதை கற்பனைக் காவிய வரலாற்று வரைவியலாளர்கள் தம் வாதமாக முன்வைத்தனர்.

ஆயினும் சார்ல்ஸ் டார்வினுடைய உயிரினங்களது பரிணாமக் கோட்பாட்டின் முன்வைப்பின் பின்னர் உயிரியல் சார்ந்த பொருட்கள் எல்லாம் மாற்றம் பெறுபவை, படிப்படியாக வளர்ச்சிப் பெறும் தன்மையுடையவை எனும் விடயம் வெளிப்பட்டது. வரலாற்றைப் போன்றே இயற்கைப் பொருட்களும் படிப்படியாக மாற்றம்கண்டு முன்னேறுபவை என்பதை நிரூபிக்கும் வகையில் அமையப் பெற்றிருந்தது. ஆகவே மாறும் இயல்புடையவற்றை ஆய்வு செய்யும் ஒத்த தன்மையுடைய விஞ்ஞானங்களாக இயற்கை விஞ்ஞானப் பாடங்களும் வரலாறும் காணப்படுவதனால் வரலாற்று வரைவியலில் இயற்கை விஞ்ஞான முறைமைகளைப் பயன்படுத்தலாம் எனும் பின்னணி நேர்கட்சிவாதத்தை வலுப்படுத்தியது எனலாம்.

சுருக்கமாகக் கூறுவதானால் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் வரலாற்று மூலாதாரங்களைத் தொகுத்து அதை முன்வைக்கக் கூறுகின்றது. அதன்போது வரலாற்றாசிரியன் வரலாற்றை விளக்குவது அவசியமாகின்றது. அவன் முதற்தர மூலாதாரங்களை தொகுத்தளிப்பதுடன் தன் பொறுப்பை நிறைவேற்றியவன் ஆகின்றான். எனவே இங்கு 'மூலாதாரங்களைப் பேசவிடுங்கள்' (Let sources to speak for themselves) எனும் பின்னணியே காணப்படுகின்றது.

விஞ்ஞானம் மேற்குலகின் அறிவுத் துறையில் அதிபதியாக இருந்த இக்காலப்பகுதியில் முன்கூறியவாறு யாவும் விஞ்ஞான முறைகளைக் கையாண்டு தம்மை விஞ்ஞானத்தின் கதவுகளுக்குள் நுழைவித்துக் கொள்ள முயன்றன. அதன் ஒரு முயற்சிதான் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் என்பது தெளிவாகின்றது. இது விஞ்ஞான வரலாற்று வரைவியலுடன் சமகாலத்தைச் சார்ந்ததாக உள்ளமையும் கவனிக்கத்தக்கது. ஏதேனும் ஒரு வரலாற்று வரைவியல் பற்றி பேசும் போது குறித்த வரலாற்று வரைவியல் மூலாதாரங்கள், வரலாற்றாசிரியன், வரலாற்றைக் கட்டியெழுப்புதல் (Historical Interpretation) மற்றும் வரலாற்று உண்மைகள் என்பன தொடர்பாக அது என்ன கருதுகின்றது என்பதை அறிவது கவனிக்கத்தக்கது.

நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலில மூலாதாரங்களுக்கு பிரதான இடம் வழங்கப்பட்டமையினால், வரலாற்றாசிரியனால் தேடிப் பெறப்படும் மூலாதாரங்கள் தெய்வீகத் தன்மை உடையன எனவும் பூஜைக்குரியன எனவும் போற்றப்பட்டன. வரலாற்றில் மூலாதாரங்கள் நேரடியாகத் தொடர்புபடுவதை எடுத்துக் காட்டியதுடன் 'கடந்த காலத்தைப் பற்றி கிடைக்கப்பெறும் தங்கப் புதையல்களாக' அவை பார்க்கப்பட்டன. எனவே எக்டன் சாமியுடைய கூற்றான, "வரலாற்று உண்மைகள் (Historical Facts) பூஜைக்குரியன: கருத்துக்கள் சுதந்திரமானவை" என்பது அதிகம் பேசப்பட்டது.

வரலாற்றாசிரியனது பண்புகள் பற்றி பேசும் போது நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலில் வரலாற்றாசிரியன் எச்சந்தர்ப்பத்திலும் மூலாதாரங்கள் மீது ஆதிக்கம் செலுத்தாதவனாக இருக்க வேண்டும் என்பதுடன் ஒரு முனிவரைப் போல எப்பகுதியும் சாராது மூலாதாரத்தில் உண்மை எனத் தான் கண்டதை அவ்வாறே எடுத்துக் கூறுபவனாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் நேர்கட்சிவாத வரலாற்றாளர்களது வாதத்தின்படி மூலாதாரங்களும் அவை முன்வைக்கும் உண்மைகளும் சத்தியமானவை எனும் எண்ணப்பாங்கே நிலவியது. அதனால் வரலாற்றாசிரியன் மூலாதாரத்தில் உள்ளவற்றை தனது எண்ணப்படி விபரிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறாக சமய செல்வாக்கிற்கு உட்பட்டு கற்பனைக் காவிய வரலாற்று வரைவியலில் சிக்கிக் கிடந்த வரலாற்றிற்கு விஞ்ஞான முறையியலைப் பின்பற்றி முற்றிலும் உண்மையானதும் பக்கச்சார்பற்றதுமான வரலாற்றைக் கட்டியெழுப்பி வரலாற்று அறிவை விருத்தி செய்யக்கூடிய பயன்மிகு கற்கைத் துறையாக மாற்றியதில் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலுக்கு பெரும் பங்குள்ளமை சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

**ஒகஸ்ட் கொம்ட் (Auguste Comte, 1798-1857 AD)**

நேர்கட்சிவாதம் மற்றும் சமூகவியல் என்பவற்றின் தந்தையென போற்றப்படும் இவர் பென்சமின் பிராங்ளின், புனித சைமன், ஜே.ஸ்டுவர்ட் மில் போன்றோரது கருத்துக்களினால் மிக்க கவரப்பட்டார் (வெங்கடேசன்,2014). வரலாறு மற்றும் சமூக விஞ்ஞானங்கள் தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டார். இவரது பார்வையில் வரலாறானது சமூக பௌதீக இயலாகக் கருதியதுடன் ஒருவன் சமூகத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் அது வரலாற்றினால் மட்டுமே சாத்தியப்படும் எனக் கூறினார்.

சமூக விஞ்ஞானங்கள் மீது அதிக ஆர்வம் காட்டிய இவர் சமூக விஞ்ஞானங்களை இரண்டாக வகுத்து நோக்கினார். அதாவது வரலாறு மற்றும் சமூகவியல் என்பனவே அவையாகும். அவர் இதற்கு விளக்கம் அளிக்கும் போது, சமூகவியலானது தற்கால சமூக மாற்றங்களைக் கருத்திற் கொள்கின்றது. அதேபோல வரலாறானது சமூகத்தின் கடந்த காலத்தை பற்றியதாக அமைந்துள்ளது எனக் கூறினார். அவ்வாறே சிறந்த ஆய்வு முறைகளாக கூர்ந்து அவதானித்தல், பரிசோதனை செய்தல, ஒப்பீட்டு முறை, வரலாற்று முறை என்பவற்றை முன்வைத்தார்(அருந்தவராஜா, 2011).

'நேர்கட்சிவாத தத்துவப் போக்கு', 'நேர்கட்சிவாத முறையிலான அரசியல்', சமூகத்தை சீரமைக்கத் தேவையான பணிக்கான திட்டம்' போன்ற நூல்களை எழுதி தனது நேர்கட்சிவாத அணுகுமுறையினை முன்வைத்தார். இதனூடாக வரலாற்று வரைவியலில் புதியதொரு மாற்றத்தைக் கொண்டுவந்தார்.வரலாற்றில் சமூகவியலை அறிமுகப்படுத்தி மனித வரலாற்றை சமூகப் பின்னணியில் இருந்து ஆய்வு செய்தார்.

இயற்கை உலகை விளக்க பௌதீக சமூக விதிகளை பயன்படுத்துவதனை போல மனித சமுதாயத்தைப் பற்றி விளக்க சமூகச் சட்டங்கள், விதிகளைப் பயன்படுத்தலாம் என்றார். இதனூடாக எதிர்கால நிகழ்வுகளை ஊகித்தறியலாம் எனக் கருதினார். விதிகளைப் பயன்படுத்தக் கூறும் இவர், வரலாற்று நிலைகளின் விதிகளாக 3 தொகுதிகளை வகைப்படுத்தியுள்ளார் (வெங்கடேசன், 2014).

1. **இறையியல் நிலை** - இறையியல் வரலாற்றை நிர்ணயம் செய்கின்றது.

2. **மனித சிந்தனைகளுக்க அப்பாற்பட்ட நிலை** - வரலாற்று நிகழ்வுகளுக்கு மனித சிந்தனைக்கு அப்பாற்பட்ட செயல்களே காரணம்.

3. **நேர்கட்சி நிலை** - விஞ்ஞான அணுகுமுறைகள் வரலாற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இவ்வாறாக கொம்ட், வரலாற்றை நிர்ணயிக்கும் விதிகளது மேற்கண்ட தொகுதிகளை அறிந்தே ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்கிறார். என்றபோதிலும் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் கூறுவது போல இயற்கை விஞ்ஞானங்களில் முன்வைக்கப்படும் பொதுவிதிகளது துல்லியமான பண்புகளை வரலாற்றைக் கட்டியெழுப்பும் செயன்முறைகளில் பொருத்திப் பார்ப்பது என்பது பொருத்தமற்றதாகும்.

**நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலில் உள்ள குறைப்பாடுகள்**

ஆதாரங்களை முதன்மையாகக்கொண்டு முடிவிற்கு வருதல் எனும் இயற்கை விஞ்ஞான முறையியலை வரலாற்றியலில் உள்வாங்கும் போது சில சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இயற்கை விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்படும் ஆதாரங்கள் நிகழ்காலத்திற்குரியவை. அழிந்து போனவை பற்றிய ஆய்வுகளாயினும் அதன் ஆதாரங்கள் மாற்றங்களுக்கு உள்ளாவதில்லை. உதாரணமாக அழிந்து போன இனமான டைனோசிரஸ் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள கிடைக்கப்பெறும் சிறிய எச்சங்களை டி.என்.ஏ மரபணு பரிசோதனைகளுக்கு உட்படுத்தும் போது கிடைக்கப்பெறும் தகவல்கள் பொய்யான தகவல்களைத் தருவதற்கான வாய்ப்புக்கள் இல்லை எனக்கூற முடியுமானளவில் நிலவுகின்றன.

என்றபோதிலும் வரலாற்றில் கையாள வேண்டிய மூலாதாரங்கள் பெரும்பாலும் சம்பவத்திற்கும் மூலாதாரத்திற்கும் இடையில் நீண்ட இடைவெளி உடையதான கடந்த காலத்திற்குரிய ஆதாரங்கள் ஆகும். அவற்றில் இலக்கிய மூலாதாரங்களை தனியே நோக்கினால் அவை காலத்திற்குக் காலம் மாற்றங்களுக்கு உட்பட்டு வந்தவையாகவும் உள்ளன. இதன் காரணமாக நடுவு நிலைமை தவறி விடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளன. இது வரலாற்றாசிரியன் அறியாமலே இடம்பெற்று விடலாம். ஆகவே நேர்கட்சி வரலாற்று வரைவியலில் கூறப்படுவது போல மூலாதாரங்களை பூஜைக்குரியனவாகக் கருதி அவற்றை அவ்வாறே ஏற்பதென்பது வரலாற்று உண்மைகளைத் தேடும் ஆய்வுகள் தோல்வியடையக் காரணியாகிவிடும்.

விஞ்ஞான ஆய்வு முறைகளை உடைய ஏனைய கற்கைத் துறைகள் பயன்படுத்தும் மூலாதாரங்களை விட வரலாற்று வரைவியலில் பயன்படுத்தப்படும் மூலாதாரங்கள் பண்பினால் வேறுபட்டவை. அதாவது வரலாற்று ஆதாரங்கள் பல்வேறு மனோநிலையுடைய வெவ்வேறு கொள்கைக் கோட்பாடுகளையுடைய சமூகங்களைச் சார்ந்தவையாக இருக்கும். மேலும் புகழ்ச்சிகள், கற்பனைகள், வர்ணனைகளையுடைய முன்னுக்குப் பின் முரனானவையாகவும் தகவல்களைத் தரக்கூடிய மூலாதாரங்கள் வரலாற்றாய்வில் பயன்படுத்தப்படும் வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. இதனால் வரலாற்றாசிரியன் தனது கருத்தை செலுத்தாது மூலாதாரங்களில் உள்ளவற்றை வெறுமனே அறிக்கையிடுபவனாக மட்டும் இருக்கும் பட்சத்தில் வரலாறு தவறாக எழுதப்படலாம்.

விஞ்ஞான ஆய்வு முறையான உற்றுநோக்கு முறையினை வரலாற்றில் உள்வாங்கும் போது, மூலாதாரங்களை புறத் திறனாய்விற்கு மட்டுமே உட்படுத்தலாம். ஆனால் அது வரலாற்றுச் சான்றுகளை சரி-பிழை என வேறுபடுத்த போதியது அல்ல. மாறாக அகத்திறனாய்வு செய்யும் போதே சரியான விடயங்களை அறிந்துகொள்ளலாம்.

விஞ்ஞான முறையியலானது அறிக்கை அமைப்புடையது. அதற்கு மொழிநடை அவசியமே தவிர இலக்கிய நடை அவசியமற்றது. ஆகவே ஆய்வின் முடிவு எதுவோ அது எழுத்துருப் பெறும். ஆயினும் வரலாற்றைப் பொருத்த வரையில் இலக்கிய நடை அவசியமாகின்றது. தொகுத்தளிக்க சிறிது கற்பனைத்திறனும் அவசியப்படுகின்றது. அல்லாத போது வரலாற்றுச் சம்பவங்களது தொடர்ச்சியைப் பேண முடியாது போகும். ஏனென்றால் மூலாதாரங்கள் கால ஒழுங்கின்படியோ அல்லது முழுமையான தகவல்களை உள்ளடக்கியோ கிடைக்கப் பெறுவதில்லை.

அத்தோடு விஞ்ஞான முறையிலான பொதுவிதிகளை வரலாற்றில் உருவாக்குவதென்பதும் சிரமமான காரியமாகும். அதாவது விஞ்ஞான துறையிலான கற்கைகளில் பொதுவிதிகள் சாத்தியப்படும். உதாரணமாக, பிரபஞ்ச விதிப்படி காலையில் சூரியன் உதிக்கும் என்பது பொது விதியாகும். ஏனென்றால் பூமி தனது சுழற்சிப் பாதையில் நேற்றும் காலையை அடைந்தது. அதன்போது சூரியன் உதித்தது. இன்றும் காலையை அடைந்தது. அதன்போதும் சூரியன் உதித்தது. அதேபோல நாளையும் பூமி காலையை அடையும். அதன் போதும்ளூ சூரியன் உதிக்கும் என்பது உலக நடைமுறையாகும். ஆகவே அதனை பொதுவிதியாக காரண காரியங்களுடன் இலகுவாக அங்கிகரிக்கலாம். ஆனால் முன் நடந்த வரலாற்றுச் சம்பவம் ஒன்றை அல்லது அதன் மாதிரியை கருத்திற்கொண்டு நிகழ்காலத்தில் அதேபோன்ற சம்பவங்கள் இடம்பெறும் போது அதன் முடிவும் முன்னையதன் முடிவை ஒத்ததாக அமையப்பெறும் என உறுதிப்படக் கூற முடியாது.

அடுத்து நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலாளர்கள் உண்மையை உறுதி செய்தல், நிகழ்வுகளிடையிலான தொடர்பை இனம் காணுதல் எனச் செயற்பட்டார்களே அன்றி வரலாற்றில் உள்ள ஏனைய துறைகளை பற்றி அவதானம் செலுத்தவில்லை. வரலாற்றில் பெரிதாக அவதானம் செலுத்தப்படாதிருந்த பொருளாதார, கலாசார அம்சங்கள் தொடர்பாக உரிய இடத்தை வழங்கத் தவறிவிட்டனர். இவ்வாறாக நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலானது வரலாற்று வரைவியலின் வளர்ச்சிப் பாதையில் மாற்றங்கள் உருவாகக் காரணியானது போலவே தன்னளவில் சில குறைப்பாடுகளையும் கொண்டிருந்தது. இக்குறைப்பாடுகள் தொடர்பான விமர்சனங்கள் வரலாற்று வரைவியலில் இன்னும் பல புதிய செல்நெறிகளது உருவாக்கத்திற்கும் வரலாற்று ஆய்வுகள் குறித்த புதிய கருத்துக்கள் வளரவும் ஏதுவாயின.

**வரலாற்றாசிரியர் ஈ.எச்.கார் பார்வையில் நேர்கட்சிவாதம்**

20ஆம் நூற்றாண்டிற்குரியவரான ஈ.எச.கார் ஒரு சிறந்த வரலாற்றாசிரியர் ஆவார். ஆங்கிலேயரான இவர் 'What is History' எனும் பிரபலமான சொற்பொழிவுகளது தொகுப்பிற்கு சொந்தக்காரர் ஆவார். இதில் அவர் வரலாறு தொடர்பாகவும் வரலாற்று வரைவியல் தொடர்பாகவும் பல கருத்துக்களை முன்வைத்துள்ளார். வரலாற்று வரைவியலில் பயன்படுத்தப்படும் மூலாதாரங்கள், வரலாற்று நிகழ்வுகள், வரலாற்றாசிரியன் எனப் பல விடயங்கள் குறித்து கருத்துரைத்துள்ளார். தனது சமகாலத்தில் இருந்த வரலாற்று வரைவியல்களை விமர்சித்துள்ளதுடன் இவரது இந்நூல் 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியுற்ற மொழியியல்சார் திருப்பத்திற்கு ஒரு திருப்பு முனையாக இவரது 1961இல் வெளியிடப்பட்ட மேற்கண்ட நூல் அமையப் பெற்றுள்ளது.

பிற்கால வரலாற்றாசிரியர்கள் ஈ.எச்.காரின் கருத்துக்களை ஆய்வுக்குட்படுத்தியதில் அவர் தொடர்பாக பின்வருமாறு கருத்துரைக்கின்றனர். அதாவது, விஞ்ஞான வரலாற்று வரைவியல் மற்றும் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் எனும் இரு வரலாற்று வரைவியல்களும் பிரதானமாகக் கொண்டுள்ள விஞ்ஞான திருப்பத்திற்கும் மறுபுறம் மொழியியல்சார் திருப்பத்திற்கும் இடைப்பட்ட சிந்தனையை உடையவராக இவரை அறிகின்றனர். அதனைப் பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

Scientific Turn

20ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பாகம் - ஈ.எச்.கார் (1961) 'What is History'

Linguistic Turn

எனவே வரலாற்று வரைவியலின் முக்கிய இரு திருப்பங்களை அடையாளப்படுத்தும் காலப்பகுதிக்குரியவராக ஈ.எச்.கார், விஞ்ஞான முறையியலை அடிப்படையாகக் கொண்ட நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் பற்றி தனது நூலில் எத்தகைய கருத்துக்களை முன்வைத்துள்ளார் என்பதனை பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

**நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலில் மூலாதாரங்களும் ஈ.எச்.காரும்**

முன்னர் கூறப்பட்டது போல 19ஆம் நூற்றாண்டானது மூலாதாரங்களுக்கு அதிகமாக முக்கியத்துவம் வழங்கப்பட்ட காலப்பகுதியாகும். வரலாற்றை ஒரு விஞ்ஞான அணுகுமுறையுடைய கற்கையாக முன்வைக்க விரும்பிய நேர்கட்சிவாத வரலாற்றாசிரியர்கள் மூலாதாரங்களது வழிபாட்டிற்கு தமது முழு ஆதரவையும் வழங்கினர். நேர்கட்சிவாதிகள் மூலாதாரம் பற்றி கொண்டுள்ள கருத்துக்களை ஈ.எச்.கார் ஆங்காங்கே எடுத்துரைத்துள்ளார்.

> ''எனக்கு ஆதாரங்கள் வேண்டும், வாழ்க்கையில் ஆதாரங்கள்தான் முக்கியம்'' –திரு.கிராட் கிரைண்டு (ஈ.எச்.கார்,2006)

> ''... மறுக்கப்பட முடியாத, புறநிலையான ஆதாரங்களை அதிகமான எண்ணிக்கையில் சேகரிப்பதில் வரலாறு அடங்கியிருக்கின்றது என்பது 19ஆம் நூற்றாண்டின் நம்பிக்கையாகும்.'' (ஈ.எச்.கார்,2006)

> ''19ஆம் நூற்றாண்டில் மெய் விவரங்களை வழிபாடு செய்தார்கள். பிறகு ஆவணங்களின் வழிபாட்டில் அது முழுமையாக்கப்பட்டு நியாயப்படுத்தப்பட்டது. மெய் விவரங்கள் என்ற கோயிலில் ஆவணங்கள் நோவாவின் தோணியாக (Ark of the Covenant) இருந்தன. மரியாதைக்குரிய வரலாற்றாசிரியர் குனிந்த தலையுடன் அவற்றை அணுகினார். மிகவும் தணிந்த குரலில் அவற்றைப் பற்றிப் பேசினார். அது ஆவணங்களில் இடம் பெற்றிருந்தால் சரியாகத்தான் இருக்க வேண்டும்...'' (ஈ.எச்.கார்,2006)

> ''வரலாறு என்பது சரிபார்க்கப்பட்ட விவரங்களின் தொகுப்பு. மின் வியாபாரியின் கல்லின் மீது வைக்கப்பட்டுள்ள மீனைப் போல ஆதாரங்கள் ஆவணங்கள், கல்வெட்டுக்கள் இதரவை மூலம் வரலாற்றாசிரியர்களுக்குகக் கிடைக்கின்றன. அவர் அவற்றைத் திரட்டுகின்றார்...'' (ஈ.எச்.கார்,2006)

இவ்வாறு நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் பற்றிக் கூறி இதிலிருந்து அடுத்த கட்டத்தை நோக்கி தனது கருத்துக்களை அவர் விரிவபடுத்தியுள்ளார்.

இங்கு 19ஆம் நூற்றாண்டின் ஆதாரங்களை சேகரிப்பது தொடர்பான நம்பிக்கை பற்றி பேசும் போது கார் இதனை நம்பும் ஒரு வரலாற்றாசிரியன் வரலாற்றாசிரியனாக இருப்பது மோசமானது என்கிறார். அத்தகையவர் பழைமை போற்றும் வேலைகளான தபால் தலை சேகரித்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவது சிறந்தது. அல்லாவிடில் பைத்தியக்காரர் விடுதியில் சேர வேண்டும் என ஏளனமாகக் கூறுகின்றார். (ஈ.எச்.கார்,2006)

ஏனைய ஆதாரங்கள் புனிதமானவை, பூஜைக்குரியவை, சரியானவை எனும் கருத்துக்கள் தொடர்பாக பின்வருமாறு கூறுகின்றார்.

"... வரலாற்று ஆதாரங்கள் தூய்மையான வடிவத்தில் நமக்குக் கிடைப்பதில்லை. ஏனென்றால் அவை தூய்மையான வடிவத்தில் இருப்பதில்லை, இருக்க முடியாது. அவை எப்பொழுதுமே பதிவு செய்பவனுடைய அறிவின் வழியாக வக்கரிப்புடன் வெளிப்படுகின்றன. ஆகவே நாம் ஒரு வரலாற்று நூலைப் படிக்கின்ற பொழுது நமது முதல் அக்கறை அதிலுள்ள விவரங்களைப் பற்றி இருக்கக் கூடாது. அதை எழுதிய வரலாற்று ஆசிரியனைப் பற்றி முதலில் சிந்திக்க வேண்டும்." (ஈ.எச்.கார்,2006)

இன்னொரு இடத்தில் ஆதாரங்களை ஆய்வுக்குட்படுத்தும் போது ஆசிரியர் பெயர் மட்டும் அறிந்து பயனில்லை என்கிறார்.

"... ஒரு வரலாற்று நூலை நீங்கள் எடுத்தவுடன் அதன் ஆசிரியர் பெயரை மட்டும் படித்தால் போதாது. அந்த நூல் எப்போது வெளியிடப்பட்டது அல்லது எழுதப்பட்டது என்பதனையும் கவனிக்க வேண்டும். சில சமயங்களில் அது கூடுதலாகப் பல செய்திகளைத் தெரிவிக்கும். நாம் ஒரே ஆற்றுத் தண்ணீரில் இரு முறை இறங்க முடியாது, என ஒரு தத்துவ ஞானி கூறியது சரியானது என்றால் ஒரு வரலாற்றாசிரியர் ஒரே மாதிரியான இரண்டு புத்தகங்களை எழுத முடியாது என்று கூறுவது இதே காரணத்தின்படி சரியானதே." (ஈ.எச்.கார்,2006)

மற்றொரு இடத்தில்,

"வரலாற்று நூலைப் படிப்பதற்கு முன்பு வரலாற்றாசிரியரைப் படியுங்கள் என்று என்னுடைய முதல் சொற்பொழிவில் நான் கூறினேன். வரலாற்றாசிரியரைப் படிப்பதற்கு முன்பு அவருடைய வரலாற்று, சமூகச் சூழலைப் படியுங்கள் என்று இப்பொழுது சேர்த்துச் சொல்கின்றேன். தனிநபர் என்ற முறையில் வரலாற்றாசிரியர் வரலாறு மற்றும் சமூகத்தினுடைய தயாரிப்பாக இருக்கின்றார். இந்த இரட்டை ஒளியின் மூலம் வரலாற்று மாணவன் அவரைப் பார்க்க வேண்டும்." (ஈ.எச்.கார்,2006)

இவ்வாறாக ஆதாரங்கள் என்பன தூய்மையானவையோ, புனிதமானவையோ அல்ல எனும் கருத்தை அவர் விளக்கினார். இவ்வாறாக ஆதாரங்கள் தன்னளவில் 'வரலாறாக' தனியே பரிணமித்துவிடாது எனக் கருதினார்.

**ஈ.எச்.கார் பார்வையில் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலில் முன்வைக்கப்படும் 'வரலாற்றாசிரியர்'**

வரலாறு சமூக செல்வாக்கிற்குட்படுவதை எதிர்த்தவரும் விஞ்ஞான முறைமையை பின்பற்றுபவருமான ராங்கே (1830) பின்வருமாறு ஒரு வரலாற்றாசிரியது பணியை பற்றி கூறுகின்றார்.

"அது உண்மையில் எப்படி நடைபெற்றது என்று எடுத்தக்காட்டுவதுதான் வரலாற்றாசிரியனுடைய கடமை." (ஈ.எச்.கார்,2006)

இக்கருத்தை ஈ.எச்.கார் விமர்சிக்கும் போது, இந்த மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு வரலாற்றாசிரியர்கள் போர்களத்தில் நுழைந்தார்கள். அவர்கள் சுயமாக சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது என்பதாகக் கருத்துரைத்தார்.

வரலாற்றாசிரியன் குனிந்த தலையுடன் ஆதாரங்களை அணுக வேண்டும், தணிந்த குரலில் அவற்றைப் பற்றி பேச வேண்டும், ஒரு முனிவராக கருத்துக்களில் பற்றற்று நடந்துகொள்ள வேண்டும் போன்ற நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலின் கருத்துக்களை கார் மறுத்தார். அவர் வரலாற்றாசிரியனுக்கு வெறுமனே பதிவு செய்வதை விட பெரும் பணிகள் இருப்பதாகக் கருதினார்.

> ''வரலாற்றாசிரியனுடைய முக்கியமான வேலை பதிவு செய்வதல்ல. மதிப்பீடு செய்வர். அவர் மதிப்பீடு செய்யாவிட்டால் ஓர் ஆவணம் பதிவு செய்வதற்கு தகுதியானது என்பதனை அவர் எப்படி கண்டுகொள்வார்?'' (ஈ.எச்.கார்,2006)

> ''வரலாற்று ஆசிரியர் வரலாற்று ஆதாரங்களைப் படைத்துக் கொள்வதற்கு முன்பு அவை தோன்றவில்லை.'' (ஈ.எச்.கார்,2006)


எனக்கூறி வரலாற்றாசிரியனே ஆதாரங்களை வெளிப்படுத்துகின்றார் என்று கூறினார்.

அதேபோல வரலாற்று ஆதாரங்களில் பொதிந்துள்ள வரலாற்று உண்மைகள் தாமே பேசும் என்பதனையும் அவர் மறுக்கின்றார்.


> ''விவரங்கள் தாமே பேசும் என்று சொல்லப்படுகின்றது. இது உண்மையல்ல. வரலாற்று ஆசிரியன் அழைத்தால்தான் விவரங்கள் பேசுகின்றன. எந்த விவரங்களைப் பேசுமாறு அழைக்க வேண்டும், எந்த சூழலில் அல்லது எந்த வரிசையில் என்பதை முடிவு செய்பவர் வரலாற்றாசிரியரே. விவரம் என்பது ஒரு சாக்குப் பை. அதில் சாமான்கள் வைத்தால்தான் அது நேராக நிற்கும்.'' (ஈ.எச்.கார்,2006)

எனவே வரலாற்றாசிரியர் விவரங்களைப் பொறுக்கி எடுக்கின்றார். வரலாற்று விவரங்கள் என்ற உட்கரு புறநிலையானது, வரலாற்றாசிரியனுடைய விளக்கத்திலிருந்து சுதந்திரமானது என்ற நம்பிக்கை முற்றிலும் தவறாகும் எனக் கார் கருதினார்.

வரலாற்றாசிரியன் மூலாதாரங்களில் இருந்து சமிக்ஞைகளாகவே தகவல்களைப் பெறுகின்றார். அதனை வரைபடமாக பின்வருமாறு விளக்கலாம்.




ஒரே மூலாதாரத்திலிருந்து பல வரலாற்றாசிரியர்கள் வெவ்வேறு சமிக்ஞைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அது அவர்கள் வாழும் சூழல், தகவல் பெறப்படும் முறை, ஆய்வுத் துறை அடிப்படையில் வேறுபடுலாம். ஈ.எச்.கார் உடைய கருத்தினை வரைபடம் மூலமாக பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.




வரலாற்றாசிரியன் தான் வாழும் காலத்துக்குச் சொந்தமானவன். மனித வாழ்க்கை நிலைமைகளில் அவன் தன்னுடைய காலத்துடன் பிணைக்கப்பட்டிருக்கின்றான். எனவே மூலாதாரங்களை பயன்படுத்தும் போது வரலாற்றாசிரியனே அவற்றின் பயன்பாட்டு முறையை தீர்மானிக்கின்றான். எனவே நேர்கட்சிவாத

வரலாற்று வரைவியலில் முன்வைக்கப்படுவது போல வரலாற்றாசிரியன் மூலாதாரங்களை தலை குனிந்து அணுக முடியாது என்பதனை கார் தெளிவாக முன்வைத்துள்ளார்.

**நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலில் விபரிப்பும் ஈ.எச்.காரும்**

விஞ்ஞான முறைமையினை ஆதரிக்கும் நேர்கட்சிவாத மற்றும் விஞ்ஞான வரலாற்று வரைவியல் போன்ற வரலாற்றாசிரியர்கள் கூறும் விபரிப்புக்கள் வரலாற்றில் அவசியமற்றவை என்பதை ஈ.எச்.கார் பின்வருமாறு கேலி செய்கின்றார்.

> ‘‘வரலாறு என்பது சரிபார்க்கப்பட்ட விவரங்களின் தொகுப்பு. மீன் வியாபாரியின் கல்லின் மீது வைக்கப்பட்டுள்ள மீனைப் போல ஆதாரங்கள், ஆவணங்கள், கல்வெட்டுக்கள் இதரவை மூலம் வரலாற்றாசிரியர்களுக்குக் கிடைக்கின்றன. அவர் அவற்றைத் திரட்டுகின்றார். தன்னுடைய வீட்டுக்கு எடுத்துச் சென்று சமையல் செய்து தனக்குப் பிடித்தமான முறையில் பரிமாறுகிறார். ஆக்டன், உணவில் அதிகமாக ருசியை விரும்பாதவர். எனவே அவர் விவரங்களை மசாலா சேர்க்காமல் பரிமாறுவதை விரும்புகிறார்.’’ (ஈ.எச்.கார்,2006)

மேலும்,

> ‘‘வரலாற்றைப் பற்றிய ஒவ்வொரு ஆதாரத்திலும் விளக்கம் என்ற அம்சம் இடம்பெறுகின்றது.’’ (ஈ.எச்.கார்,2006)

எனவும் மற்றொரு இடத்தில்,

> ‘‘... நீங்கள் ஒரு வரலாற்று நூலைப் படிக்கும் பொழுது அதிலிருந்து வருகின்ற ஓசைகளை முதலில் உற்றுக் கேட்க வேண்டும். ஓசைகள் கேட்கவில்லை என்றால் நீங்கள் டமாரச் செவிடு, அல்லது அந்த வரலாற்றாசிரியர் சுவாரஸ்யமில்லாதவர். விவரங்கள் மீன் வியாபாரிக்கு முன்பாக உள்ள கல்லின் மீது வைக்கப்பட்டிருக்கும் மீனைப் போன்றவையல்ல. எவரும் நெருங்க முடியாத மாகடலில் நீந்திக் கொண்டிருக்கும் மீன்களைப் போன்றவை விவரங்கள். வரலாற்றாசிரியர் எந்த மீனைப் பிடிக்கின்றார் என்பது தற்செயலானது. என்றாலும் மாகடலின் எந்தப் பகுதியில் அவர் மீன் பிடிக்கின்றார், எப்படிப்பட்ட தூண்டிலை அவர் பயன்படுத்துகின்றார் என்பதைப் பிரதானமாக பொருத்திருக்கின்றன.’’ (ஈ.எச்.கார்,2006)

எனக் கூறுகின்றார். இவ்வாறு வரலாற்றியலில் விபரிப்பு அத்தியாவசியமானதாகும் என்கிறார். அத்தோடு அவை வரலாற்றாசிரியனுக்கு வரலாற்றாசிரியன் வேறுபடும் என்பதனையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

**முடிவுரை**

நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலானது 19ஆம் நூற்றாண்டின் விஞ்ஞானத் திருப்பத்தில் உதயமான ஒரு வளர்ச்சிக் கட்டத்தைக் காணக்கூடிய வரலாற்று வரைவியல் முறை ஒன்றாகும். எனவே இவர்கள் வரலாற்று வரைவியலில் காவிய மரபை நீக்கி மூலாதாரங்களை அதிபதியாக்கி பூஜை செய்வதாக மாற்றினர். இதன்படி ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றை வற்புறுத்தினர். அத்தோடு அந்த ஆதாரங்களை வரலாற்றாசிரியன் ஒரு முனிவரைப் போல பக்கம் சாராது மதிப்பிடாது ‘பதிவிடுதல்’ எனும் செயலை பணியாகக் கொள்ளுதல் வேண்டும். முடியுமான வரையில் ஆதாரங்களை சேகரித்து அவற்றை பதிவிடுதலுடன் அவனது பணி முற்றுப் பெறுகின்றது. அத்தோடு வரலாற்று உண்மைகள் தானாக பேச விடப்பட வேண்டும். ஏனெனில் கருத்துக்கள் சுதந்திரமானவை. அங்கு விபரிப்பு அவசியப்படுவதில்லை எனும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தனர். ஆயினும் வரலாற்று வரைவியலில் இருந்த காவிய மரபை நீக்கி வரலாற்றை மூலாதாரங்கள் அடிப்படையில் கட்டியெழுப்புவதன்பால் நகர்த்திய

முன்னோடி கருத்துக்களாக அதன் சமகாலத்தில் நோக்கப்பட்டாலும் பின்னர் உருவான வரலாற்று வரைவியல் சிந்தனைகளால் விமர்சிக்கப்பட்டன.

நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல், ஆதாரங்களைக் கொண்டு ஒன்றை உறுதிப்படுத்துதல் எனும் விஞ்ஞான அணுகு முறையை வரலாற்று வரைவியலில் உள்வாங்கக் காரணமானது. நேர்கட்சிவாத வரலாற்று வரைவியலை 1961இல் ஈ.எச்.கார் விமர்சன ரீதியாக தனது சொற்பொழிவில் 'வரலாறு என்றால் என்ன' எனும் தலைப்பில் ஆய்வு செய்தார். இவரது விமர்சனங்களுடன் நேர்கட்சிவாத வரலாற்று வரைவியல் தனது அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கிப் பயணித்தது. இவ்வளர்ச்சியானது வரலாற்று வரைவியலை விஞ்ஞான அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்ட முன்னேற்றகரமான ஒரு தளத்தின்பால் நகர்த்திச் சென்றது எனலாம்.

**உசாத்துணைகள்**

அருந்தவராஜா,கந்தையா, (2011). வரலாற்று வரைவியல், நல்லூர்: அஞ்சு வெளியீட்டகம்.

கார்,ஈ.எச். (2006). (மொ.பெ)நா.தர்மராஜன், வரலாறு என்றால் என்ன?, சென்னை: அலைகள் வெளியீட்டகம்.

வெங்கடேசன்,க. (2014). வரலாற்று வரைவியல், இராஜபாளையம்: வி.சி.பப்ளிகே'ன்ஸ்.

சண்முகலிங்கம்,என். (2008). சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள், யாழ்ப்பாணம்: நாகலிங்கம் மூலாயம்.

அ%மனமயு¥“›“^2009&“ கலஈ b;sydi i<l=K iy b;sydi ms<sn| fn!oAO oDIAáh” கடனஈரு(ioSmd m%ldYk ukAosrh'

(ஸ்ரீ பிரனாந்து, ஹெல வரலாற்றின் அடையாளங்களும் வரலாறு பற்றிய பௌத்த பார்வையும்)

http://en.m.wikipedia.org/wiki/positivism

https://www.britannica.com/topic/positivism

http://link.springer.com/chapter/10

http://www.historylearningsite.co.uk/sociology/research-methods-in-sociology/positivism